
# நான் இப்போது ஏன் சபைக்குப் போவதில்லை?

## உறவுமுறையிலான சபையில் வாழ்தல் VI

Wayne Jacobsen




பிரியமான சக-விசுவாசியே,

நீங்கள் என்மேல் வைத்திருக்கும் அக்கறையையும், உங்களுக்கு சங்கடத்தை ஏற் படுத்துகிற விஷயங்களைப்பற்றி என்னிடம் கேட்க உங்களுக்கு இருக்கும் விருப்பத் தையும் நான் நிச்சயமாகப் பாராட்டுகிறேன். நான் சபையைப்பற்றிப் பேசுகிற விதம் கொஞ்சம் வழக்கத்திற்கு மாறானது என்று எனக்குத் தெரியும். இது ஆபத்தானது என்று கூட சிலர் சொல்கிறார்கள். இந்த சங்கடத்தை நான் புரிந்துகொள்கிறேன். என்னை நம்புங்கள். ஏனென்றால், நானும் இப்படித்தான் நினைத்தேன். மற்றவர்களுக்கும் அப்படியே போதித்தேன்.

அமைப்புரீதியான மதம் இன்று இருக்கும் நிலையில் நீங்கள் சந்தோஷமாக இருந்தால், நான் இங்கு கூறுவதை நீங்கள் ஒருவேளை விரும்பாமல் போகக்கூடும். இந்த வியத்தகு சபையை நான் பார்ப்பதுபோலவே நீங்களும் பார்ப்பதற்கு உங்களை நம்பவைப்பதல்ல என் நோக்கம். மாறாக, என்னால் முடிந்த அளவுக்கு உங்கள் கேள்விகளுக்கு வெளிப் படையாகவும், நேர்மையாகவும் பதிலளிக்க வேண்டும் என்பதே என் நோக்கம். கடைசி யில், நமக்குள் உடன்பாடு ஏற்படாவிட்டாலுங்கூட, நம் வேறுபாடுகள் நாம் கிறிஸ்து வினுடைய சரீரத்தின் அவயவங்கள் என்ற முறையில் நம்மிடையே இருக்கும் உறவைக் குலைக்கத் தேவையில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

***நீங்கள் சபைக்கு எங்கு போகிறீர்கள்?***

ஒரு குறிப்பிட்ட நிறுவனத்துக்குப் போகிறேன் என்று என்னால் பதிலளிக்க முடிந்தாலுங்கூட, "நீங்கள் சபைக்கு எங்கு போகிறீர்கள்?" என்ற இந்தக் கேள்வியை நான் ஒருபோதும் விரும்பினதில்லை. கலாச்சாரரீதியில் இதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குத் தெரியும். ஏற்கெனவே கூறப்பட்டுள்ள ஒரு பொய்யான காரணமே இதற்கு ஆதாரம்−−சபை என்பது ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்காக, ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கிற ஒன்று அல்லது அது அமைப்புரீதியான ஒரு குழு; நீங்கள் அங்கு போகலாம் என்பதுதான் அந்த தவறான கூற்று. இயேசு சபையை முற்றிலும் வேறு விதமாகப் பார்க்கிறார் என்று நான் நினைக்கிறேன். சபை என்பது நாம் போகக்கூடிய ஓர் இடம் என்று அவர் பேசவில்லை. மாறாக, அது நாம் அவருடனும், அவரைப் பின்பற்று பவர்களுடனும் உறவுகொண்டு வாழும் வாழ்க்கைமுறை என்று அவர் கூறினார்.

நான் சபைக்கு எங்கு போகிறேன் என்று கேட்பது, நான் ஜேக்கப்செனுக்கு எங்கு போகிறேன் என்று கேட்பதுபோலாகும். இதற்கு நான் எப்படிப் பதிலளிப்பது? நான்தான் ஜேக்கப்சென். நான் எங்கு போகி றேனோ அங்கு ஜேக்கப்சென் இருக்கிறான். "சபை" அப்படிப்பட்ட ஒரு வார்த்தை. அது ஓர் இடத்தையோ அல்லது ஒரு நிறுவனத்தையோ குறிக்கவில்லை. அது மக்களையும், அவர்கள் ஒருவரோடொருவர் எப்படி உறவுகொள்கிறார்கள் என்பதையும் விவரிக்கிறது. நாம் இதைத் தவறவிட்டுவிட்டால், சபையைப்பற்றிய நம் புரிந்துகொள்ளுதல் உருக்குலைந்து, அதன் விளைவாக நாம் சந்தோஷத்தை இழந்துவிடுவோம்.

***நீங்கள் இந்தக் கேள்வியைத் தவிர்க்க முயற்சிசெய்கிறீர்களா?***

இது, வெறுமனே வார்த்தைகளைக் கொண்டு விளையாடுவதைப்போல் மட்டுமே தோன்றக்கூடும் என்று எனக்குத் தெரியும். ஆனால், வார்த்தைகள் முக்கியமானவை. நாம் 'சபை' என்ற வார்த்தையை வாரக் கடைசியில் நடக்கும் கூட்டங்களை அல்லது தங்களை 'சபைகளாக' அமைப்புமுறைப்படுத்திக்கொண்ட நிறுவனங்களை மட்டுமே குறிப்பதற்குப் பயன்படுத்தினால், கிறிஸ்துவின் சரீரமாக வாழ்வதென்றால் என்ன பொருள் என்பதை நாம் தவறவிட்டுவிடுகிறோம். அது, வாரத்துக்கு ஒருமுறை ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதால் நாம் தேவனுடைய சபையில் பங்குபெறுகிறோம் என்ற ஒரு பொய்யான பாதுகாப்பான உணர்வை நமக்கு ஏற்படுத்திவிடும். இதற்கு நேர்மாறாக, மக்கள் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாரோடு கலந்துகொள்வதை நிறுத்தும்போது, அவர்கள் 'சபையைவிட்டுப் போய்விட்டார்கள்' என்று பிறர் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன்.

சபை என்பது நாம் போகிற ஓர் இடம் அல்ல, மாறாக நாம்தான் சபை; அப்படியானால், நாம் இயேசுவை விட்டுப் போனால்தவிர, நாம் சபையைவிட்டு எப்படிப் போக முடியும்? ஒரு குறிப்பிட்ட கூட்டத்தார் மட்டுமே

சபையின் என் பகுதி என்று நான் நினைத்தால், நான் கலந்துகொள்கிற கூட்டத்தில் கலந்துகொள்ளாத ஏராளமான மற்ற சகோதர சகோதரிகளிடமிருந்து நான் என்னைப் பிரித்துக்கொள்ளவில்லையா?

இசை நிறைந்த ஒரு ஸ்தோத்திர நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காகவும், ஒரு பிரசங்கத்தைக் கேட்பதற்காகவும் ஞாயிற்றுக்கிழமை காலையில் கூடிவருகிறவர்கள் மட்டும்தான் சபையின் பகுதி, அப்படிச் செய்யாத வர்கள் சபையின் பகுதி இல்லை என்ற கருத்து இயேசுவுக்கு அந்நியமாகவே இருக்கும். வாரக் கடைசியில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாம் எங்கு இருக்கிறோம் என்பதல்ல காரியம். மாறாக, வாரம் முழுவதும் நாம் அவரிலும், மற்ற விசுவாசிகளுடனும் எப்படி வாழ்கிறோம் என்பதுதான் காரியம்.

### *ஆனால், வழக்கமான ஐக்கியம் நமக்குத் தேவையில்லையா?*

நமக்குத் தேவை என்று நான் சொல்லமாட்டேன். மற்ற விசுவாசிகளைக் கண்டுபிடிக்கமுடியாத ஓர் இடத்தில் நாம் இருந்தால், இயேசுவால் நிச்சயமாக நம்மைக் கவனித்துக்கொள்ள முடியும். எனவே, நான் அதை கொஞ்சம் வித்தியாசமாகச் சொல்ல விரும்புகிறேன். ஜீவிக்கும் தேவனை அறிவதற்காக வளர்ந்து கொண்டிருக்கும் மக்கள் மற்ற விசுவாசிகளுடன் உண்மையான, அர்த்தமுள்ள உறவுகளை விரும்புவார்களா? நிச்சயமாக! இராஜ்ஜியத்திற்கான அழைப்பு ஒதுங்கியிருப்பதற்கான அழைப்பு அல்ல. இயேசுவின் ஜீவனில் செழித்து வளர்ந்துகொண்டிருக்கிற மக்களை நான் சந்தித்திருக்கிறேன். மற்ற விசுவாசிகளுடன் நம்பகமான உறவைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை அவர்கள் எல்லாரிடமும் இருக்கிறது. தேவனுடைய ஜீவனைப்பற்றி தாங்கள் அறிந்திருப்பது வெறுமனே ஒரு சிறிய பகுதிதான் என்றும், அவரைப்பற்றிய நிறைவான வெளிப்பாடு சபையில்தான் இருக்கிறது என்றும் அவர்கள் உணர்கிறார்கள்.

ஆனால், அப்படிப்பட்ட ஐக்கியத்தைக் கண்டுபிடிப்பது எளிதல்ல. நம்மிடம் இருக்கும் அதே தாகத்தை யுடைய மற்ற விசுவாசிகளைக் கண்டுபிடிக்க முடியாது என்பதுபோல் தோன்றக்கூடிய பல வேளைகளை நாம் இந்தப் பயணத்தில், அவ்வப்போது, சந்திக்கக்கூடும். குறிப்பாக, தங்களைச் சுற்றியுள்ள மதரீதியான நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஒத்திருக்க முயற்சிசெய்வது இயேசுவுடனான தங்கள் உறவை மங்கச்செய்கிறது என்பதைக் காண்கிறவர்களைப் பொறுத்தவரை இது உண்மை. தங்களுடைய நெருக்க மான நண்பர்கள் என்று இவர்கள் நினைத்த விசுவாசிகள்கூட இவர்களை விலக்கிவைத்திருப்பார்கள். இந்தப் பாதையினூடாய்ச் செல்கிற யாரும் அந்த நேரத்தை இன்பமான விருந்தாகக் கருதமாட்டார்கள். இது சொல்லமுடியாத வேதனை. அவர்கள் தங்கள் பயணத்தைப் பகிர்ந்துகொள்ள தாகமுள்ள மற்ற விசுவாசிகளைத் தேடிக்கொண்டிருப்பார்கள்.

ஒரு வட்டாரத்தில் ஒரு கூட்டம் மக்கள் நெருக்கமான நட்பை வளர்த்துக்கொண்டு, ஒன்றாகச் சேர்ந்து தேவனுக்கு செவிகொடுப்பது எப்படி என்று கற்றுக்கொண்டு, வாழ்க்கைப் பயணத்தின் ஒரு பகுதியை சேர்ந்து நடப்பதுதான் சபை வாழ்க்கை; இதுதான் சபை வாழ்க்கையைப்பற்றிய என் பிரியமான விளக்கம்.

### *உள்ளூர் ஐக்கியத்திற்கு நம்மை ஒப்படைத்துவிட வேண்டாமா?*

உள்ளூர் ஐக்கியத்திற்கு நம்மை ஒப்படைத்துவிட வேண்டும் என்று இன்று அடிக்கடி பேசுகிறார்கள். எனவே, இது வேதாகமத்தில் எங்கேயோ இருக்கிறது என்று நம்மில் பெரும்பாலோர் நினைக்கிறோம். ஆனால், இதுவரை நான் அதைக் கண்டுபிடிக்கவில்லை. ‘சரீரத்தின் மூடுதல்’ இல்லாமல் தாக்குப்பிடிப்பது சாத்தியம் இல்லை என்றும், ஒன்று நாம் தவறிவிடுவோம் அல்லது பின்வாங்கிப்போய் பாவத்தில் விழுந்துவிடுவோம் என்றும் நம்பும் அளவுக்கு நம்மில் பலர் நடத்தப்பட்டிருக்கிறோம். ஆனால், இது நம் உள்ளூர் கூட்டத் துக்குள்ளேயும் நடப்பதில்லையா?

இந்த அமைப்புமுறைகளுக்கு வெளியே வாழ்கிற அநேக மக்களை எனக்குத் தெரியும். அவர்கள் தேவ னோடு நாள்தோறும் ஆழமாகிக்கொண்டுபோகிற உறவை அனுபவிப்பதோடு மட்டுமின்றி, நிறுவனங்களில் அவர்கள் காணாத ஆழமான உறவை மற்ற விசுவாசிகளோடும் ஏற்படுத்திக்கொள்கிறார்கள். இயேசு வின்மேல் நான் கொண்டிருந்த பேரன்பையோ அல்லது அவருடைய சபையின்மேல் நான் கொண்டிருந்த பாசத்தையோ நான் இழக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், அந்தப் பேரன்பும், பாசமும் சமீப காலங்களில் பன்மடங்கு வளர்ந்திருக்கின்றன.

ஒரு நிறுவனத்திற்கு அல்ல, மாறாக ஒருவருக்கொருவர் நாம் நம்மை ஒப்படைத்துவிடுமாறு வேதவாக் கியங்கள் நம்மை உற்சாகப்படுத்துகின்றன. இயேசுவின்மேல் கவனத்தைக் குவித்து, எங்கெல்லாம் இரண்டு அல்லது மூன்றுபேர் கூடிவருகிறார்களோ, அங்கு அவர்கள் சபை வாழ்க்கையின் உயிர்த்துடிப்பை அனுபவிப்பார்கள் என்று இயேசு சுட்டிக்காட்டினார்.

இப்படிப்பட்ட நிஜம் ஓரிடத்தில் வெளியாக்கப்பட்டால், அதில் வழக்கமாகப் பங்குபெறுவது உதவியாக இருக்காதா? நிச்சயமாக உதவியாக இருக்கும். ஆனால், நாம் ஒன்றாகச் சேர்ந்து ஒரே நிகழ்ச்சியில்,

அதுவும் வழக்கமாக, கலந்துகொள்வதால் மட்டுமே அல்லது நாம் ஒரே நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் மட்டுமே ஐக்கியம் உருவாகிறது என்று நினைக்கும்போது, நாம் மிகப் பெரிய தவறு செய்கிறோம். இயேசுவை அறிகிற பயணத்தை மக்கள் எங்கு சேர்ந்து பகிர்ந்துகொள்கிறார்களோ அங்கு ஐக்கியம் ஏற்படுகிறது. இதில் வெளிப்படையான, நேர்மையான பகிர்ந்துகொள்ளுதலும், ஒருவரொருவருடைய ஆவிக்குரிய நலனில் உண்மையான அக்கறையும், இயேசு மக்களை நடத்துகிறபடி அவரைப் பின்பற்ற அவர்களை உற்சாகப்படுத்துதலும் அடங்கும்.

***ஆனால், நம் நிறுவனங்கள் தவறிலிருந்து நம்மைக் காப்பதில்லையா?***

உங்களுடைய பொய்யான கருத்தை நான் தகர்க்கப்போகிறேன். தங்களைச் சுற்றியிருக்கிற வேறு யாரையும்விட தேவனுடைய மனம் தங்களுக்குத்தான் நன்றாகத் தெரியும் என்று நினைத்த 'தலைவர்களைக்' கொண்ட அமைப்புரீதியான குழுக்களிலிருந்துதான், கடந்த 2000 ஆண்டுகளாக தேவனுடைய மக்கள்மேல் சுமத்தப்பட்ட பெரிய சமயபேதகங்கள் அனைத்தும் வந்திருக்கின்றன. இதற்கு நேர்மாறாக, உண்மையாகவே தேவன்மேல் பசியோடிருந்த மக்களிடையே ஏற்பட்ட தேவனுடைய ஒவ்வோர் அசைவும் அந்த நாளில் இருந்த 'சபையால்' புறக்கணிக்கப்பட்டது; அந்த மக்கள் தேவனைப் பின்பற்றியதின் காரணமாக விலக்கப்பட்டார்கள், நீக்கப்பட்டார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள்.

அங்குதான் பாதுகாப்பாக இருக்க முடியும் என்று நீங்கள் நம்பினால், உங்கள் நம்பிக்கையை நீங்கள் மிகத் தவறான இடத்தில் வைத்திருக்கிறீர்களோ என்று நான் பயப்படுகிறேன். 'சபைக்குப் போவது' நம்மைப் பாதுகாக்கும் என்று இயேசு சொல்லவில்லை; மாறாக, அவரை விசுவாசிப்பது நம்மைப் பாதுகாக்கும் என்று அவர் கூறினார். அவர் நமக்கு ஆவியானவரின் அபிஷேகத்தைத் தந்திருக்கிறார்; எனவே, சத்தியத்திற்கும் தவறுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை நம்மால் அறிந்துகொள்ள முடியும். நாம் அவருடைய வார்த்தையில் அவருடைய வழிகளை அறிந்து, அவருடைய இருதயத்திற்கு நெருக்கமாக நாம் வளர்கையில், அந்த அபிஷேகம் வளர்கிறது. நீங்கள் சபையின் ஒரு வெளியாக்கத்தோடு உங்கள் வாழ்க்கையைப் பகிர்ந்துகொண்டிருக்கக்கூடும். அது உங்களில் தேவனுடைய வேலையை அழிக்கக்கூடியதாக எப்போது மாறுகிறது என்பதை இனங்காண அந்த அபிஷேகம் உங்களுக்கு உதவும்.

***எனவே, பாரம்பரியமான கூட்டங்கள் தவறா?***

நிச்சயமாக இல்லை! தேவனை நேசிக்கிற, அவருடைய வழிகளில் வளர்வதைத் தேடுகிற மக்கள் நிறைந்த பாரம்பரியமான பல கூட்டங்களை நான் பார்த்திருக்கிறேன். வித்தியாசமான பல கூட்டங்களுக்கு நான் வருடாவருடம் போகிறேன். அவர்கள் மதத்தைவிட உறவையே அதிக மையமாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சேர்ந்து வாழும் வாழ்க்கையில் இயேசுவே மையமாக இருக்கிறார். அங்கு தலைவர்கள்போல் செயல்படுபவர்கள் உண்மையான வேலைக்காரர்களாக இருக்கிறார்கள்; அவர்கள் தலைவர்களாக இருக்க அரசியல் விளையாட்டு விளாயாடுவதில்லை; எனவே, ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்ய எல்லாரும் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள்.

இயேசுவின்மேல் கொண்ட பேரன்பினால் அவர்களில் அநேகர் கொளுந்துவிட்டெரிகிறார்கள் என்றும், ஒவ்வொருவரும் மற்றவர்கள்மேல் உண்மையான அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்றும், தேவனுடைய அன்பை உலகத்துக்குத் தெரிவிக்க விருப்பமாக இருக்கிறார்கள் என்றும் எனக்குத் தெரியும். ஆனால், இப்படிப்பட்டவை நம் சமுதாயத்தில் அபூர்வம் என்பதையும், அவை கொஞ்சக் காலம் மட்டுமே இப்படி இருந்துவிட்டு, பின்பு சரீரத்தின் தேவைகளுக்காக இயேசுவைச் சார்ந்திருப்பதற்குப்பதிலாக, தங்களை அறியாமலே, நிறுவனம் தரும் பதில்களை எதிர்பார்க்க ஆரம்பித்துவிடுகிறார்கள் என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அது சம்பவிக்கும்போது, அவர்களோடு சேர்ந்து போக வேண்டாம் என்று தேவன் உங்களை நடத்தினால், அதனால் நீங்கள் குற்றவாளி என்று நினைக்க வேண்டியதில்லை.

***எனவே, நான் சபைக்குப் போவதையும் நிறுத்திவிட வேண்டுமா?***

இந்தக் கேள்வியும் முக்கியமான விஷயத்தைத் தவறவிட்டுவிடுகிறது என்று நான் நினைக்கிறேன். நீங்கள் இப்போது என்னைவிட அதிகமாக சபைக்குப் போகிறீர்கள் என்று நான் நினைக்கவில்லை. நாம் அதின் பகுதியாக இருக்கிறோம். இயேசு உங்களை எப்படி அழைத்தாலும் சரி, அவர் உங்களை எங்கு வைத்தாலும் சரி, நீங்கள் உங்கள் பகுதியாக இருங்கள். நாமெல்லாரும் ஒரே சூழலில் வளர்வதில்லை.

நீங்கள் ஒரு கூட்டம் விசுவாசிகளுடன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடிவருகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதில் பங்குபெறுதல் நீங்கள் இயேசுவுக்கு நெருக்கமாக வளர்வதற்கு உங்களுக்கு உதவிசெய்தால், அவர் உங்களில் செய்துகொண்டிருக்கும் வேலையைப் பின்பற்றுவதற்கு உங்களை அனுமதித்தால், நீங்கள் அவர்களை விட்டு விலக வேண்டும் என்று நினைக்கவே

வேண்டாம். ஆயினும், அது தன்னில்தானே சபை இல்லை என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் வாழும் இடத்தில், அது சபையின் பல வெளியாக்கங்களில் ஒரு வெளியாக்கம். அவ்வளவுதான்.

நீங்கள் அதின் கூட்டங்களில் கலந்துகொள்வதால், உண்மையான சரீர வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்ற எண்ணத்தினால் வஞ்சிக்கப்பட்டுவிடாதீர்கள். ஒரு சில சகோதர சகோதரி களோடு நீங்கள் நெருக்கமான நட்பை வளர்க்க முடியும், உங்கள் பயணத்தின் உண்மையான ஏற்ற இறக் கங்களை அவர்களோடு பகிர்ந்துகொள்ள முடியும்; இப்படிப்பட்டவர்களோடு தேவன் உங்களை இணைக் கும்போதுதான் உண்மையான சபை வாழ்க்கை ஏற்படுகிறது.

பாரம்பரியமான கூட்டத்தினரிடையிலும் இது நடக்க முடியும்; அதற்கு வெளியிலும் இது நடக்க முடியும். பாரம்பரியமானக் கூட்டங்களின் வெறுமையில் ஏமாற்றமடைந்த−−ஒருவேளை ஆயிரக்கணக்கான மக்க ளாக இல்லாவிட்டாலும்−−நூற்றுக்கணக்கான மக்களை, கடந்த ஏழு ஆண்டுகளில் நான் சந்தித்திருக் கிறேன். அவர்கள் தேவனுடைய ஜீவனை மற்றவர்களுடன், பெரும்பாலும் அவர்களுடைய வீடுகளில், பகிர்ந்துகொள்கையில் ஆவிக்குரிய வாழ்க்கையில் செழிப்பாக வளர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

***அப்படியானல், வீடுகளில் கூடுவதுதான் பதிலா?***

நிச்சயமாக இல்லை. ஆனால், ஒரு காரியத்தில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். பெரிய கூட்டத்தில் ஆராதனையை அனுபவித்து மகிழ்ந்தாலும், கொடைபெற்ற போதகர்களால் போதிக்கப்பட்டாலுங்கூட, சரீர வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சியை பெரிய குழுக்களில் பகிர்ந்துகொள்ள முடியாது. முதல் 300 ஆண்டுகளில் சபை கூடிவருவதற்கு வீடுதான் சரியான இடமாக இருந்தது. வீடுதான் குடும்பத்தின் இயக்கவிதிகளுக்கு மிகவும் ஏற்றதாக இருக்கிறது. இயேசு தம் சரீரத்தை அப்படித்தான் விவரித்தார்.

ஆனால், வீடுகளில் கூடுவது சர்வ நிவாரணி அல்ல. நான் மிக நோய்வாய்ப்பட்ட வீட்டுக் கூட்டங்களிலும் கலந்துகொண்டிருக்கிறேன். நம்பகமான சரீர வாழ்க்கையைச் சேர்ந்து பகிர்ந்துகொள்கிற வசதி களையுடைய குழுக்களிலும் நான் கலந்துகொண்டிருக்கிறேன். ஆனால், நேர்த்தியான சரீர வாழ்க்கையில் நான் செலவழிக்கும் நேரத்தை, ஒரு கூட்டம் மக்களோடு நான் நேருக்கு நேர் செலவழிக்க விரும்புகிறேன். துல்லியமாக முறைப்படுத்தப்பட்ட (அல்லது துல்லியமாக முறைப்படுத்தப்படாத) ஓர் ஆராதனையில் சும்மா உட்கார்ந்துவிட்டு, நம் வாழ்க்கையை யாருக்கும் ஒருபோதும் திறந்துகாண்பிக்காமல் அல்லது மற்றவர்களின் பயணத்தைப்பற்றி அக்கறைப்படாமல் வீட்டுக்குப் போவது மிகவும் எளிது என்று எங்கு மக்கள் கருதுகிறார்களோ அங்கு இது பிரபலமாக இருக்காது என்று எனக்குத் தெரியும்.

ஆனால், மொத்தத்தில், என்னைப் பொறுத்தவரை மக்கள் எங்கு அல்லது எப்படி கூடிவருகிறார்கள் என்பது ஒரு பொருட்டல்ல; அவர்கள் இயேசுவின்மேல் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துகிறார்களா என் பதும், அவரைப்போல் மாற பயணத்தில் ஒருவருக்கொருவர் உண்மையாகவே உதவுகிறார்களா என் பதுமே காரியம். கூட்டங்களல்ல காரியம்; உறவுகளின் தரம்தான் காரியம். நான் எங்கு இருந்தாலும் சரி, எப்போதும் அப்படிப்பட்ட மக்களையே தேடுகிறேன். அப்படிப்பட்ட மக்களைப் பார்க்கும்போது நான் எப்போதும் சந்தோஷப்படுகிறேன். ஆக்ஸ்நார்டில் உள்ள எங்கள் புதிய வீட்டில், அப்படிப்பட்ட ஒரு சிலரை நாங்கள் கண்டுபிடித்திருக்கிறோம்; இன்னும் அதிகமானபேரைக் கண்டுபிடிக்க முடியும் என்று நம்புகிறேன்.

***காயப்பட்டதின் காரணமாக நீங்கள் இப்படிச் செயல்படவில்லையா?***

இது சாத்தியம் என்று வைத்துக்கொள்வோம்; ஆனால், காலம்தான் இதற்குப் பதில் சொல்லும் என்று நான் நினைக்கிறேன். ஆனால், நேர்மையாகச் சொல்வதானால், இது காயப்பட்டதன் காரணமாக என்று நான் நினைக்கவில்லை. உண்மையான சரீர வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிற யாராக இருந்தாலும் சரி, அவர்கள் சில நேரங்களில் காயப்படுத்தப்படுவார்கள். ஆனால், இரண்டு விதமான காயங்கள் இருக் கின்றன. ஒரு விதமான வலி ஒரு பிரச்சினையைக் குறிக்கிறது; சரியான அக்கறை எடுத்துக்கொண்டால், அந்தப் பிரச்சினையை சரிசெய்ய முடியும்--எடுத்துக்காட்டு, மோசமாக சுளுக்கிக்கொண்ட கணுக்கால். இன்னொரு விதமான வலி இருக்கிறது; தூரமாக இழுத்துக்கொள்வதால் மட்டுமே அதைச் சரிசெய்ய முடியும்--எடுத்துக்காட்டு, சூடான அடுப்பின்மேல் உங்கள் கையை வைக்கும்போது.

தேவனுடைய ஜீவனை நிறுவனங்களுக்குள் பொருத்த நாம் முயற்சிசெய்ததால், ஒருவேளை நாமெல் லாரும் ஓரவுக்கு வேதனையினால் கஷ்டப்படிருக்கிறோம். சில காரியங்களைத் திருகி இழுத்தால், எல்லாம் சரியாகி விடும் என்ற நம்பிக்கையில் நம்மில் பெரும்பாலோர் நீண்ட காலமாக அங்கு தாக்குப்பிடித் துக்கொண்டிருந்தோம். எழுப்புதல் நேரங்களில் நாம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வெற்றி பெற முடிந் தாலுங்கூட, கடைசியாக, ஒத்திருக்க வேண்டும் என்று நிறுவனம் கோருவதும், கிறிஸ்துவுக்குள் வளர மக்களுக்குத் தேவையான சுதந்தரமும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றன. உண்மையில், கிறிஸ் தவத்தின் வரலாறு முழுவதும உருவாக்கப்பட்ட எல்லாக் குழுக்களிலும் இது சம்பவித்திருக்கிறது.

***நீங்கள் பரிபூரணமான சபையைத் தேடுகிறீர்களா?***

இல்லை. நித்தியத்தின் இந்தப் பக்கத்தில் பரிபூரணமான ஒரு சபையை நான் எதிர்பார்க்கவில்லை. என் இலக்கு பரிபூரணம் அல்ல; மாறாக, தேவனுடைய முன்னுரிமைகளைத் தங்களுடைய முன்னுரிமை களாகக்கொண்ட மக்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதே என் இலக்கு. மக்கள் தாங்கள் ஒன்றாகச் சேர்ந்து பகிர்ந்துகொள்கிற உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்காகப் போராடுவது என்பது ஒரு காரியம். நம் உயர்ந்த இலட்சியங்களுக்குப் பொதுவான காரியம் எதுவும் இல்லை என்பதை உணர்வது என்பது இன்னொரு காரியம்.

அமைப்புரீதியான கிறிஸ்தவத்தின் நிலைமையைப் பார்த்து நான் மிகவும் கலங்குகிறேன் என்ற உண்மையை நான் மறைக்கவிரும்பவில்லை. இன்று நாம் 'சபை' என்றழைக்கிற பெரும்பாலானவை நன்றாகத் திட்டமிடப்பட்ட நாடக நிகழ்ச்சிகள் போன்றவைதானே தவிர வேறொன்றுமல்ல. அங்கு விசுவாசி களுக்கிடையே ஏறக்குறைய எந்தத் தொடர்பும் இல்லை. விசுவாசிகள் இயேசுவைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, அமைப்புமுறையின்மேல் அல்லது அதின் தலைவர்கள்மேல் அதிகமாகச் சார்ந்திருப்பதற்கு உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். மக்கள் சிலுவையின் அடியில் மறுசாயலாக்கப்படுவதற்கு அவர்களுக்கு உதவுவதற்குப்பதிலாக, நிறுவனத்தின் தேவைகளுக்கேற்றவாறு அவர்களை ஒத்திருக்கச் செய்யவே நாம் அதிகமான சக்தியைச் செலவழிக்கிறோம்.

சபை என்பது வாரத்தில் இரண்டு மணி நேரம் தங்கள் குற்றத்தைக் கொட்டித் தீர்ப்பதற்கான ஒரு குப்பைக் கிடங்கு என்று நினைக்கிற மக்களுடன் ஐக்கியம்கொள்ள முயற்சிசெய்து நான் களைத்துப்போனேன். வாரத்தின் அந்த இரண்டு மணி நேரத்தைத் தவிர, மற்ற எல்லா நேரமும் அவர்கள் உலகத்தாரைப் போலவே வாழ்கிறார்கள். தங்கள் சொந்த நீதியின் கிரியைகளைச் சார்ந்துகொண்டு, உலகத்து மக்கள்மேல் எந்த மனதுருக்கமும் இல்லாத மக்களைப் பார்த்து நான் களைத்துப்போனேன். கிறிஸ்துவின் சரீரத்தைத் தங்கள் சுயத்தின் நீட்டிப்பாகப் பயன்படுத்தி, தங்கள் சொந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்ய அதைத் தந்திரமாகக் கையாளுகிற பாதுகாப்பற்ற மக்களைப் பார்த்து நான் களைத்துப்போனேன். தேவனுடைய அன்பின் சுதந்தரத்தைவிட மதத்தின் அடிமைத்தனத்தால் நிறைந்த, உறவுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு திறமையான நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கிற பிரசங்கங்களைக் கேட்டு நான் களைத்துப்போனேன்.

***ஆனால், நம் குழந்தைகளுக்கு சபையின் நடவடிக்கைகள் தேவையில்லையா?***

அவர்கள் மற்ற விசுவாசிகளுடன் கொள்கிற உறவுமுறையிலான ஐக்கியத்தின்மூலம் அவர்களைத் தேவனுடைய ஜீவனுக்குள் இணைத்துச் சேர்ப்பதே அவர்களுடைய முக்கியமான தேவை என்று நான் கூறுவேன். பொம்மைகளும், உயர்தர பொழுதுபோக்கும் நிறைந்த ஞாயிறு பள்ளிகளில் வளர்கிற 92% குழந்தைகள், தங்கள் பெற்றோர்களின் வீட்டைவிட்டுப் போகும்போது, 'சபையை' விட்டுப் போய்விடு கிறார்கள். நம் குழந்தைகளுக்கு நன்னெறிகளையும், சட்டங்களையும் போதிப்பதற்குப்பதிலாக, தேவ னுடைய ஜீவனில் எப்படி வாழ வேண்டும் என்று நாம் வாழ்ந்து காட்ட வேண்டும்.

ஒரு குழந்தை வயது முதிர்ந்தவர்களுடன் ஆழமான, தனிப்பட்ட நட்பை வளர்த்துக்கொள்வதுதான், அது சமுதாயத்தில் செழித்து வளருமா என்பதைத் தீர்மானிக்கிற முதல் காரணி என்று சமூக அறிவியலாளர் கள்கூட கூறுகிறார்கள். ஆஸ்திரேலியாவில் உள்ள ஒரு சமுதாயத்தை எனக்குத் தெரியும். தேவனுடைய ஜீவனை 20 ஆண்டுகளாகக் குடும்பங்களாகச் சேர்ந்து பகிர்ந்துகொண்டபிறகும், குழந்தைகள் வாலிபர் களானபோது ஒரு குழந்தையைக்கூட விசுவாசத்திற்குள் கொண்டுவர முடியவில்லை என்று அவர்கள் கூறினார் கள். நான் இங்கு என்று எனக்குத் தெரியும். ஆனால், நம் பிள்ளைகள், குழந்தைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட மெருகேற்றப்பட்ட செயல்திட்டங்களின் மணிகளையும், விசில்களையும் அனுபவிப்பதைவிட, விசுவாசிகளுக்கிடையிலான உண்மையான ஐக்கியத்தை அனுபவிப்பது மிக முக்கியமாகும்.

***சரீர வாழ்க்கையின் எந்த இயக்கவிதிகளை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?***

ஜீவிக்கும் கிறிஸ்துவைப் ஆசையாய்ப் பின்பற்றுகிற மக்களை நான் எப்போதும் தேடுகிறேன். அவரே அவர்களுடைய வாழ்க்கையின், அவர்களுடைய பாசங்களின், அவர்களுடைய உரையாடலின் மையம். அவர்கள் போலியற்றவர்கள்; அவர்கள் மற்றவர்களை விடுதலை செய்கிறார்கள். எனவே, அவர்கள் பிரி வினைவாதிகள் அல்லது கலகக்காரர்கள் என்று மற்றவர்கள் அவர்கள்மேல் குற்றஞ்சாட்டாதபடிக்கு, அவர்கள் காயப்படுத்தும்போது காயப்படுத்தலாம், கேட்கவிரும்பும் கேள்வியைக் கேட்கலாம், அவருடைய சத்தத்தைப் பின்பற்றலாம். தங்கள் பணத்தை ஊதாரித்தனமான கட்டிடங்களிலோ அல்லது பகட்டான செயல்திட்டங்களிலோ வீணாக்காத மக்களை நான் தேடுகிறேன். அங்கு அடுத்தடுத்து இருக்கும் மக்கள் ஒருவருக்கொருவர் அந்நியர்களாக இருக்கக்கூடாது. அங்கு பாதுகாப்பான தூரத்தில் மந்தமாக

அமர்ந்துகொண்டு ஒரு பார்வையாளனாக பார்த்துக்கொண்டிருப்பதற்குப்பதிலாக, அவர்களெல்லாரும் தேவனை ஆசாரியர்களாக சேவிக்கிறார்கள்.

***வீட்டில் சும்மா உட்கார்ந்துகொண்டு, ஒன்றும் செய்யாமலிருக்க நீங்கள் மக்களுக்கு சாக்குப்போக்கு கொடுக்கவில்லையா?***

அப்படியல்ல என்று நான் நம்புகிறேன். ஆனாலும், அந்த ஆபத்து இருக்கிறது என்று எனக்குத் தெரியும். பாரம்பரியமான கூட்டத்தை விட்டுப் போகிற சில மக்கள் தங்கள் சொந்த ஆசைகளை நிறைவேற்ற அந்த சுதந்தரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும், அதனால் சபை வாழ்க்கையை முற்றிலும் தவறவிட்டுவிடுகிறார்கள் என்பதையும் நான் உணர்கிறேன். நான், சமீபத்திய வெற்றுக் கொள்கையை அல்லது தங்கள் சுயநலமான ஆசையை நிறைவேற்ற மிகச் சரியான வாய்ப்பைத் தேடிக்கொண்டு ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஓடுகிற 'சபைவிட்டு சபை தாவுகிற' மக்களின் விசிறியல்ல.

ஆனால், நான் சந்திக்கிற, பேசுகிற பெரும்பாலான மக்கள் அமைப்புமுறைக்கு வெளியே இருப்பதற்குக் காரணம் அவர்கள் இயேசுவின்மேல் அல்லது அவருடைய மக்கள்மேல் கொண்ட பேரன்மை இழந்துவிட்டாதால் அல்ல. மாறாக, அவர்களருகே இருந்த பாரம்பரியமான கூட்டங்கள், உறவுகொண்டு வாழ வேண்டும் என்ற அவர்களுடைய பசியைத் திருப்திப்படுத்தாததே காரணம். அவர்கள் சரீர வாழ்க்கையின் நம்பத்தக்க வெளியாக்கத்தைத் தேடுகிறார்கள்; அதைத் தேடிக் கண்டுபிடிக்க அவர்கள் பெரிய விலைக்கிரயம் செலுத்துகிறார்கள். எல்லாரும் போகிற போக்கிலே நாமும் அவர்களோடு சேர்ந்து செல்வது எளிது. ஆனால், பேரன்புடைய விசுவாசிகளுக்கிடையே நீங்கள் ஜீவிக்கும் ஐக்கியத்தை ஒருமுறை சுவைத்துவிட்டால் போதும், அதற்குப்பின் அதைவிடக் குறைவான ஒன்றில் திருப்தியடைவது சாத்தியமேயில்லை.

***சபையைப்பற்றிய இந்தக் கருத்து பிரிவியையை உண்டாக்காதா?***

பிரிவினையை ஏற்படுத்தாது. சத்தியத்தைப்பற்றிய தங்களுடைய வெளிப்பாட்டுக்கு ஒத்திருக்குமாறு அவர்கள் மக்களை வற்புறுத்தும்போது, அவர்கள் அதைப் பிரிவினையாக்கி விடுகிறார்கள். இந்தப் பயணத்தில் சென்றுகொண்டிருக்கிற பெரும்பாலோர் பிரிவினைவாதிகள் என்று குற்றஞ்சாட்டப்படுகிறார்கள். தங்கள் பாதுகாப்பு மதரீதியான அமைப்புமுறையில் இருக்கிறது என்று நினைக்கிறவர்களுக்கு சுதந்தரம் பயமுறுத்துதலாகத்தான் இருக்கும். மற்றவர்கள் தங்கள் கூட்டத்தைவிட்டு வெளியே வந்து எங்கள் கூட்டத்தில் சேர்ந்துகொள்ள வேண்டும் என்ற ஆள்சேர்க்கும் வேலையை நாங்கள் செய்யவில்லை. எப்படி கூடிவர வேண்டும் என்று தேவன் மக்களை அழைத்தாலும் சரி, அவர்களெல்லாரையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும் அளவுக்கு கிறிஸ்துவின் சரீரம் பெரியது.

பாரம்பரியமான சபையைப்பற்றி அடிக்கடி ஒரு காரியம் சொல்லப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை காலை நேரம்தான் அமெரிக்கனுடைய கலாசாரத்தில் மிகவும் ஒதுக்கப்பட்ட மணி நேரம் என்பதுதான் அந்தக் காரியம். அப்போது, நம்மைப்போல் தோற்றமளிக்கிற, காரியங்களை நாம் செய்வதுபோல் செய்கிற மக்களைச் சந்திக்கிறோம். ஆனால், அவருடைய சரீரத்தின் பலதரப்பட்ட மக்களைச் சந்திக்க எனக்கு இப்போது அதிக வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் கண்டுகொண்டேன். காரியங்களை நான் செய்வதுபோல்தான் மற்றவர்களும் செய்ய வேண்டும் என்று நான் வற்புறுத்துவதில்லை. அதுபோல, காலப்போக்கில், காரியங்களை வித்தியாசமாகப் பார்ப்பவர்கள், அவர்கள் செய்வதுபோல்தான் நானும் செய்ய வேண்டும் என்று என்னை வற்புறுத்தமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

***அப்படிப்பட்ட ஐக்கியத்தை எங்கு காண முடியும்?***

இதற்கு எளிமையாகப் பதில் சொல்ல முடியாது. நீங்கள் ஏற்கெனவே எந்த ஐக்கியத்தில் இருக்கிறீர்களோ, அங்கு உங்கள் கண்களுக்குமுன்னால் இது இருக்கக்கூடும். தெருவின் அற்றத்தில் உங்கள் சுற்றுப்புறத்தில் அல்லது நீங்கள் வேலைசெய்யும் இடத்தில் ஒரு தனிஅறையில் இது இருக்கக்கூடும். உங்களில் இருக்கும் அவருடைய ஜீவனை வாழ்ந்துகாட்டவும், உங்களில் இருக்கும் அதே பசியையுடைய மக்களைச் சந்திக்கவும், உங்கள் வட்டாரத்தில் வாழ்கிற குறைச்சலுள்ள மக்களுக்கும், உடைந்துபோன மக்களுக்கும் செய்யப்படுகிற இரக்கமுள்ள செயல்களில் நீங்கள் ஈடுபடலாம்.

இப்படிப்பட்ட ஐக்கியம் எளிதில் ஒரு நிறுவனமாக மாறிவிடும் என்று நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம். இது ஜீவாதாரரீதியானது. நீங்கள் எங்கு இருக்கிறீர்களோ, அங்கேயே இயேசுவால் உங்களை நடத்த முடியும். உங்கள் வாழ்க்கையில் அவர் பத்து இருபதுபேரை கொண்டுவருகிறாரா என்று பாருங்கள். அவர்களெல்லாரும் ஒருவேளை நீங்கள் போகிற அதே கூட்டத்துக்குப் போகாமல் இருக்கக்கூடும். அவர்கள் தேவனைப் பின்பற்றிச் செல்கிற அண்டை வீட்டுக்காரர்களாக அல்லது உடன் வேலையாட்களாக இருக்கக்கூடும். தேவனுடைய மக்களிடையே ஏற்படும் அப்படிப்பட்ட உறவு சில வியத்தகு கனிகளை உருவாக்காதா?

இது எளிதாக இருக்கும் அல்லது உராய்வு இல்லாமல் சுமுகமாகச் செல்லும் என்று எதிர்பார்க்க வேண்டாம். இயேசுவுக்குக் கீழ்ப்படிய நாம் சில குறிப்பிட்ட காரியங்களைத் தீர்மானிக்க வேண்டும். நீங்கள் உங்கள் பழைய பழக்க வழக்கங்களைக் களைந்தெறிந்து, உங்களைச்சுற்றி அவர் தம் சமுதாயத்தைக் கட்டுவதற்கு அவரை அனுமதிக்குமாறு நீங்கள் விடுதலைபெற உங்களுக்குக் கொஞ்சம் பயிற்சி தேவைப்படலாம். ஆனால், இப்படிச் செய்வது தகும். ஞாயிற்றுக்கிழமை காலையில், சபையில் விசுவாசிகளுக்காகப் போடப்பட்டிருக்கிற இருக்கைகளில் நான் போய் என் வழக்கமான இருக்கையில் அமர்வதில்லை என்பது சில மக்களை சங்கடப்படுத்துகிறது என்று எனக்குத் தெரியும். ஆனால், அமைப்புரீதியான மதத்துக்கு உள்ளே நான் சந்தித்த மிகச் சிறந்த நாட்களைவிட, அதற்கு வெளியே நான் சந்தித்த மிக மோசமான நாட்கள் சிறந்தவை என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். என்னைப் பொறுத்தவரை, வித்தியாசம் குழிப்பந்து விளையாட்டைப்பற்றிப் பேசுகிற ஒருவருக்கு செவிகொடுப் பதற்கும், கொஞ்சம் தடிகளை எடுத்துக்கொண்டு, மைதானத்துக்குப் போய் குழிப்பந்து விளையாடு வதற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைப் போன்றது. அவருடைய சபையாக இருப்பது இதுபோன்றது. நம் நாட்களில், சபையைப்பற்றிய அதிகமான பேச்சு நமக்குத் தேவையில்லை. மாறாக, சபையின் நிஜத்தில் வாழ தயாராக இருக்கும் மக்களே நமக்குத் தேவை.

உலகமெங்கும் மக்கள் மீண்டும் இப்படி வாழ்வது எப்படி என்பதைப் பசுமையாகக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் விரும்புகிறபடி அவர் உங்களைத் தம் சரீரத்தில் வைக்க நீங்கள் விட்டுக் கொடுக்கும்போது, நீங்கள் அவர்களில் ஒருவராக இருக்க முடியும்.